**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 15.07.2025**
**OS. No. 29/2015**
**வழக்கு சாட்சி PW.1–அருணாசலம் , த/பெ. பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**3 , 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கை மகாலட்சுமி மற்றும் நடராஜன் மீது தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யாமல் இருக்கவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் ச.எண்.85/8B5AB ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1468 சதுரடி என் மனைவி பெயரிலும், 578 சதுரடி என் பெயரிலும் உள்ளது. 1468 சதுரடி நிலத்திற்கு சக்குபந்தி விவரம் ரோட்டிற்கு மேற்கு, மகாலட்சுமி நிலத்திற்கு கிழக்கு, ஆனந்தன் நிலத்திற்கு வடக்கு, காலி நிலத்திற்கு தெற்கு ஆகும். 578 சதுரடி நிலத்திற்கு சக்குபந்தி விவரம் 15 அடி ரோட்டிற்கு மேற்கு, ராதாமணி நிலத்திற்கு கிழக்கு, என் மனைவி நிலத்திற்கு வடக்கு, 15 அடி நிலத்திற்கு தெற்கு ஆகும்.

2) வீரக்கல் புதூர் கிராம ச.எண்.85/18A5 நிலத்தில் 1 ம் பிரதிவாதி மகாலட்சுமி என்பவர் 30 சென்ட் நிலத்தை 2 ம் பிரதிவாதி KC நடராஜன் மற்றும் அவரது குடும்பத்தினரிடமிருந்து கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 1 ம் பிரதிவாதி 08.07.2015 ல் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டாவது 1 ம் பிரதிவாதி 30 சென்ட் நிலம் கிரையம் பெற்றது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 2 ம் பிரதிவாதி KC நடராஜன் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.28/2013 என்ற வழக்கை 1 ம் பிரதிவாதி மற்றும் 3 ம் பிரதிவாதி ஆகியோர் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் 2023 ல் எனது வழக்கறிஞர் சொல்லி தெரிந்து கொண்டேன்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA170000462015/truecopy/order-4.pdf
www.ecourtsindia.com

3) 1ம் பிரதிவாதி மகாலட்சுமி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் செல்லும் என்றும், அதன் பிறகு தாவா சொத்து சம்மந்தமாக கிரைய ஆவணங்கள் செல்லாது என மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. 1ம் பிரதிவாதி மகாலட்சுமிக்கு தாவா சொத்தை விற்பனை செய்து விட்டு, 2ம் பிரதிவாதி மோசடியான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ன் படி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மகாலட்சுமி பெயரில் கிரையம் இருப்பது தெரிந்தும், அவர் தான் சுவாதீன அனுபவத்தில் உள்ளார் என்பது தெரிந்தும் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியை பொறுத்து தாவா சொத்தில் என் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். 2ம் பிரதிவாதி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியவில்லை.

4) என் மனைவி பெயரிலுள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தாவா சொத்து சம்மந்தமாக எந்த வில்லங்க விக்கிரையமும் இல்லை என்றும், நீதிமன்றத்தில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.2 ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு அவ்வாறு இருப்பது தெரியவந்தால் எங்களுக்கு ஏற்படும் இழப்புகளை மற்ற அசையும் அசையா சொத்துக்களை வைத்து ஈடுசெய்து கொடுப்பதாக 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு, இதற்கு முந்தைய வழக்கு, மகாலட்சுமி மீதுள்ள கிரையப்பத்திரம் ஆகியவை குறித்து தெரிந்து கொண்ட பிறகு KC நடராஜன் மீது இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் என் பெயரிலோ, என் மனைவி பெயரிலோ உள்ளதா என்றால் என் மனைவி பெயரில் உள்ளது. என் பெயரில் பட்டா வழங்க நான் விண்ணப்பித்துள்ளேன்.

5) என் மனைவி பெயரிலுள்ள பட்டா எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் தாவ சொத்திற்கான பட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களது கிரைய பத்திரத்திற்கு பின்னிட்டு தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டதாக எனக்கு

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA170000462015/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com

நினைவில்லை. நான் மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் நிறுவனத்தில் சிவில் சூப்பர்வைஸராக பணி செய்து, 2018ல் ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கு நிலுவையிலிருந்தபோது 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி ஸ்ரீலதா, 5ம் பிரதிவாதி கீதா மற்றும் 2ம் பிரதிவாதி KC நடராஜனின் வாரிசுகளான ரவிசங்கர் மற்றும் உமாசங்கர் ஆகியோர் தாவா சொத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டு எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்திலும் அவ்வாறு ஆட்சேபனை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 18.12.2019ம் தேதியில் மாலை மலர் நாளிதழிலும் அவ்வாறு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அறிவிப்புக்கு பின்னிட்டு 2ம் பிரதிவாதியின் மனைவி பழனியம்மாள், அவரது மகன் ரவிசங்கர், மகள் ஸ்ரீலா, கீதா, மற்றொரு மகன் உமாசங்கர் ஆகியோர் சேர்ந்து இந்த வழக்கு சொத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டு 2021ல் விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

6) மேற்கண்ட நபர்கள் ராஜேஸ்வரிக்கு கிரையம் கொடுத்துள்ளனர் என்றும், நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று, அந்த கிரையத்தில எனக்கு ஆட்சேபனை இல்லை என்று எழுதிகொடுத்துள்ளேன் என்றும், அதற்கு KC நடராஜன் அவர்களின் வாரிசுகளிடமிருந்து ரூ.6 லட்சம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. KC நடராஜன் தாக்கல் செய்த அ.வ.எண்.28/2013 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு பிறகு மேல்முறையீடு ஏதேனும் செய்தாரா என்றால் இல்லை. மேற்படி நான் அறிவிப்பு அனுப்பிய நபர்களில் ஒருவரான உமாசங்கர் இந்த வழக்கு சொத்து, 1ம் பிரதிவாதி மகாலட்சுமி கிரையம் பெற்ற சொத்து ஆகியவற்றை சேர்த்து மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.20/2015 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சொத்து சம்மந்தமான மூல ஆவணங்கள் ஏதேனும் 2ம் பிரதிவாதி KC நடராஜனிடம் வாங்கினேனா என்றால் இல்லை.

7) எனக்கு கிரையம் கொடுக்க 2ம் பிரதிவாதி KC நடராஜனுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அவருக்கு உரிமையில்லாத சொத்தை என் பெயரில் மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மகாலட்சுமி தன்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA170000462015/truecopy/order-4.pdf

பதிலுரையில் தாவா சொத்தை தான் கிரையம் பெற்றிருப்பதாகவும், தன் பெயரில் பட்டா பெற்றிருப்பதாகவும், சுவாதீனத்தில் தான் தான் உள்ளதாக தெரிவித்த பிறகும், விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு நிலத்தை விற்ற 2ம் பிரதிவாதி KC நடராஜனுக்கும், 1 மற்றும் 3ம் பிரதிவாதிக்கும் இ,டையே இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் நிராகரிக்கப்பட்டு, அவர் மேல்முறையீடு செய்யாமல், என்னை தூண்டிவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், என் மனைவியும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ன் அடிப்படையில எங்கள் உரிமை மூலத்தை விளம்புகை கேட்காமல், அ.வ.எண்.28/2013ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை செல்லாது என கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. எனக்கு மேற்கண்ட அனைத்து விவரங்களும் தெரிந்திருந்தும், 2ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் பிரதிவாதிகளிடம் உள்ள தாவா சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள சொத்துவிவரம், சக்குபந்தி தவறு என்றால் சரியல்ல. இதே நீதிமன்றம் 1ம் பிரதிவாதியை உரிமையாளர் என்று தீர்மானித்து தீர்ப்பு வழங்கியுள்ளதால் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. அரசு கந்தாயம் கட்டுவதை 15 வருடங்களுக்கு முன்னதாகவே ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA170000462015/truecopy/order-4.pdf